முருகப்பெருமான் துணை

# மகான் திருமழிசை ஆழ்வார் அருளிய யோக பிரசன்ன ஆசி நூல்

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

12.06.2021, சனிக்கிழமை

1. மகத்துவம் கொண்ட ஞானியே
மாதவசியே ஆறுமுக அரங்கனே
செகத்தினை வென்று மீட்க
சித்தர் நெறி காட்டும் தேசிகனே
2. தேசிகனே உன்பெருமை கூறி
தெரிவிப்பேன் யோகபிரசன்ன ஆசி
ஆசிபட பிலவ விடை திங்கள்
அறிவிப்பேன் இருபான்நவதிகதி காரிவாரம்
(பிலவ வருடம் வைகாசி மாதம் 29ம் நாள், 12.06.2021 சனிக்கிழமை)
3. வாரமதில் திருமாழிசை ஆழ்வாரும்
வழங்குவேன் உலகோர் நலம்பெற
பாரமான கலியின் துன்பங்கள்
பறந்தோடி உலகம் பாதுகாப்பு காண
4. காணவே ஞானிகள் வழிகளை
கட்டாய வழிபாடாகச் செய்து
ஞானதேசிகன் உபதேசங்களை
ஞானமாக ஏற்று நடக்க
5. நடக்கவே மக்களின் கட்டங்கள்
நசிவுற்று முற்றிலும் விலகும்
இடரெனும் சகல துன்பங்களும்
இவ்வுலகை விட்டு அகலும்
6. அகலவே அரங்கன் காட்டும்
அன்னதான சேவை தன்னை
செகமெங்கும் ஏற்று செய்திட
செப்பிடுவேன் வினைகள் விலகி
7. விலகியே நல்வினை பெருகி
வினவிட ஞான லோகம் ஆகும்
கலகம் மாச்சர்ய செயல்களும்
கரைந்து உலகை விட்டகலும்
8. அகலவே ஆபத்தை வெல்லவே
அச்சுறுத்தும் நச்சுக்கிருமி அல்லல்
அகலவே ஞானிகள் பூசையை
அனைவரும் செய்து கொண்டு
9. கொண்டுமே தரும பலம் கூட்டி
குறையிலா தவ தியானமுறை
உண்டான நாளும் தொடர
ஊழ்போல கரைந்து சடுதி

10. சடுதி உலகம் அமைதிபெறும்
சர்வ சூட்சும அரங்கன் வழி
இடர் வெல்லும் சக்தி பரவி
இந்த உலகம் பெரும் பாதுகாப்பு அடையும்

11. அடையவே அகிலம் எங்கிலும்
ஆறுமுகன் ஆசிபெற்ற நல்
சோடையிலா ஞானஆட்சி மலரும்
சொல்லிய யோகபிரசன்ன ஆசிமுற்றே

—சுபம்—